[1970 ஆகஸ்ட் 27

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : குறைந்த பட்சம் கூலி நிர்ணயம் 1948 ஆண்டு சட்டப்படி ஒரு ஆலோசனைக் குழு அமைக்க வேண்டுமென்று தீவிரமாக முயற்சி எடுக்கப்பட்டது. எல்லாத் தொழிற்சங்கங்களும் ஒத்துழைக்கவில்லை. விசைத்தறித் தொழில் 90 வகையாக நாடு முழுவதிலும் இருக்கிறது. ஆலோசனை குழு பல்வேறு பகுதிகளுக்கும் போய் ஆராய்ந்து அறிக்கை வெளியிட்டால் நல்ல முறையிலே, குறைந்த பட்சம் கூலி நிர்ணயம் செய்யலாம் என்று கருதப்படுகிறது. உதாரணமாக திரு. துரைசாமி அவர்கள் சார்ந்திருக்கின்ற தொழிற்சங்கத்திற்கு அங்கு பணிபுரியும் பணியாளர்கள் எவ்வளவு பேர்கள் என்று 3 முறை கடிதம் எழுதியும் இதுவரையில் பதில் இல்லை. இப்படிப்பட்ட இடர்பாடுகள் இருக்கின்றன. எனவே, இந்த விஷயத்தில் அவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) சில உறுப்பினர்களை கோயம்புத்தூர் மத்திய சிறையில் காவலில் வைக்கப்படும் காலநீடிப்புப் பற்றிய தகவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 8—8—1970 அன்று கைது செய்யப்பட்டு கோயம்புத்தூர், மத்திய சிறையில் காவலில் வைக்கப்பட்டுள்ள திரு. என். மருதாசலம் 22—8—1970 முதல் மேற்கொண்டும் 15 நாள் கால அளவுக்குக் காவலில் வைத்திருக்கும் படி ஆணையிடப்பட்டுள்ளதாக கோயம்புத்தூர் கூடுதல் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டிடமிருந்து தகவல் வந்துள்ளது என்பதை இப் பேரவைக்கு நான் அறிவிக்கிறேன்.

(3) அரசினர் தீர்மானம்

தனி உறுப்பினர் அலுவலுக்கு பதிலாக அரசினர் அலுவலை எடுத்துக்கொள்வது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அவை முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டுவருவார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீமானத்தை நான் முன்மொழிகிறேன்.

"தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளின் 23 (1) வது விதியைத் தள்ளிவைத்து இப்பேரவை இன்று அரசினர் அலுவலை எடுத்துக்கொள்ளவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.